# யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி - செய்திமடல்
# Jaffna National College of Education - News letter

# குருதீபம்
ගුරුදීපම
Gurutheepam

09.02.2021

சிறப்பிதழ் 02





# "வித்தகரி"

உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் அவர்களின் அகவை 60 நிறைவில் வெளிவருகின்ற குருதீபம் சிறப்புச் செய்திமடல்!

## பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



தனி மனித வாழ்வியலின் தலைமைப் பண்பு என்பது குடும்பத்திலிருந்தே ஆரம்பிக்கின்றது என்பது வரலாற்று உண்மையாகும். மனித வாழ்வின் நிரந்தர அர்த்தம் தமது வேலையில் அவர்களுக்கு கிடைக்கும் வெற்றி மட்டுமல்லாமல், அது சமூக எச்சங்களின் நற்பண்புகளை உருவாக்கும் பண்பிலும் அதற்கான முயற்சியிலுமே தங்கியுள்ளது. குழந்தைகளை சிறுவயதில் தென்படும் இயலுமைகளின் அறிகுறிகளை அடியொற்றி வளர்த்தால் துறைசார் நிபுணத்துவமுடையவர்களைத் தவிர மற்றவர்களை உருவாக்கியிருக்க முடியாது. சுலபமாக இருக்கும் காரியங்களை மட்டுமே செய்தால் நாம் இலக்கினை அடைவதென்பது சிரமமான காரியம். எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் உணர்ந்து மன மகிழ்வுடன் செயலாற்றுவதன் மூலம் எதிர்காலத்திற்கு பயன் தரக் கூடிய சமூக எச்சங்களை உருவாக்கிக் கொள்ளலாம்."வித்ததரி"உயர்திரு ஞானமணி இரத்தின சிங்கம் இதற்கு உதாரணமானவர்.

தன்னை உண்மையாக அறிதலிலேயே ஒருவரின் நடத்தைப் பாங்குகள் தங்கியுள்ளன.சமய விழுமியங்கள் கூறிச் செல்லும் தத்துவங்களும். வாழ்வியல் சிந்தனைகளும் சந்தோசமான வாழ்கை முறைகளையே உணர்த்திச் செல்கின்றன. முயற்சி செய்வது என்பதை விட வாழ்க்கைக்கு நிறைய அர்த்தம் சேர்க்க வேண்டும் என ஒவ்வொருவரும் தன்னாயிலன்றவரை அர்ப்பணிப் புடன் பாடுபடுவதன் மூலமே நிறையுணர்வை தமதாக்கிக் கொள்ள முடியும். அந்த வகையில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகத்துடன் இணைந்து செயலாற்றிய வித்ததரி உயர்திரு ஞானமணி இரத்தின சிங்கம் அவர்கள் தனது நடத்தைப் பாங்குகள் மூலம் எல்லோரினதும் அன்பைப் பெற்றதுடன் மற்றவர்களுக்கு எவ்வாறு உதவி செய்யலாம் என்றும் மற்றவர்களின் எதிர்மறை விமர்சனங்களை சாதகமாக நோக்க வேண்டுமென்ற மனப்பாங்கையம் கொண்டவர். வழி காட்டிக் கம்பங்கள் (Sign Post) குறித்த இலக்கை அடைவதில்லை. ஆனால் அதன் வழியில் செல்பவர்கள் இலக்கை இலகுவில் அடைந்து விடுவார்கள்.


தொடர்ச்சி 2ம் பக்கத்தில்...




மணிவிழா நாயகன்
உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம்
அவர்களுக்கு

**"வித்தகரி"**

என்னும் கௌரவப்பட்டத்தை வழங்கிக் கௌரவிப்பதில் யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரிச் சமூகம் பெருமையடைகின்றது!

## மணி விழா நாயகனை வாழ்த்தி மகிழ்கின்றோம்!



உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம்
முதுநிலை விரிவுரையாளர்
யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி
கோப்பாய்.

***போசகர்:***

திரு.சுப்பிரமணியம் பரமானந்தம்
பீடாதிபதி

***ஆலோசகர்கள்:***

செல்வி செ.செல்வமலர்
திரு. தி.ஜெயகாண்டீபன்
திருமதி. செ.சிவபாதம்
உப பீடாதிபதிகள்

***ஆசிரியர் குழு:***

திரு.சி.முகுந்தன்

திரு.ம.நிரேஸ்குமார்

திருமதி.ஜெ.உதயகுமார்

திருமதி.ஞா.கணேசநாதன்

திருமதி.சு.விக்னமோகன்

திரு.ப.இராஜேஸ்வரன்

திரு.பொ.விஜயகுமாரன்

கலாநிதி.எஸ்.பத்மராசா

திரு.அ.லோகநாதன்

திரு.து.இளங்குமரன்

***வெளியீடு***

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி,
கோப்பாய்.
021 223 0036
Jaffnancoe@hotmail.com
www.jaffnancoe.lk


அந்த வகையில் கோட்பாட்டுக்கும், அனுபவங்களுக்கும் இடையிலான தெளிவான விளக்கத்தை பெற்றுள்ள வித்தகரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் அவர்கள் பல வைத்தியர்களுக்கும், கல்விமான்களுக்கும், ஆசிரியர்களுக்கும் அவருடன் பழகும் எல்லோருக்கும் ஒரு வழி காட்டிக் கம்பமாக செயற்பட்டவர். தனக்கும் பிறருக்கும் தற்காலத்திலும் பிற்காலத்திலும் துன்பம் வராத செயல்களைச் செய்தும், பிறருக்கு உதவி செய்தும் வாழ்வதே சமயங்கள், வேதங்கள், புராணங்கள் கூறும் வாழ்க்கைத் தத்துவங்கங்களாகும். அந்த வகையில் தம்மால் இயன்றவரை மற்றவர்களுக்கு உதவுவதையே நோக்கமாகக் கொண்டு செயலாற்றும் வித்ததரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் அவர்களின் வாழ்க்கை சிறப்பாக அமைய எல்லாம் வல்ல வித்தக வினாயகர், முடி மன்னர் வைரவர் உள்ளிட்ட இஸ்ட தெய்வங்களின் இறையாசியை வேண்டி வாழ்த்துகின்றேன்.

உலக வாழ்வியலில் ஒவ்வொரு தனி மனிதனும் ஏதோவொன்றுக்காக பலவற்றை இழப்பதும், பறிப்பதும் மற்றும் வழங்கலுமாக வாழ்வுக்கான போராட்டமாக மனிதம் சுழன்றுகொண்டு இருக்கின்றது.

**சு.பரமானந்தம்**
**பீடாதிபதி**
**யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி**
**கோப்பாய்.**

**எங்கள் வித்தகரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் ஐயாவுக்கு மனம் நிறைந்த வாழ்த்துக்கள்!**

உம்முடைய ஒவ்வொரு அசைவிலிருந்தும் நாம் கற்றுக் கொண்டவை ஏராளம். வேகம், விவேகம், உற்சாகம், விமர்சனங்களைப் பொருட்படுத்தாமல் செயற்படுதல், எதிர் விமர்சனம் செய்பவர்களையும் செயல்களினால் கட்டிப் போடுதல் எனப் பட்டியல் நீண்டு கொண்டே செல்கின்றது.

அரச சேவை நிறைவுக்குப் பின்னரான அடுத்த கட்ட வாழ்க்கையில் தாங்கள் எல்லாச் சிறப்புக்களையும் பெற்று சிறந்த தேக ஆரோக்கியத்துடன் நிறைவாக வாழ்ந்து, உங்களால் உங்கள் குடும்பமும் இந்த நாடும் சிறப்படைய இறைவனின் அருளும் ஆசிகளும் கிடைக்க வேண்டுமென இறைவனைப் பிரார்த்தித்து எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ம.நிரேஸ்குமார்**

**வாழ்க பல்லாண்டு**

எம் வாழ்வில் உம்மைப் பின் தொடர்ந்து இன்றுள்ள நிலை எய்தினோம். வாழ்க பல்லாண்டு! நண்பனாய் மந்திரியாய் நல்லாசிரியனாய் பண்பிலே தெய்வமாய் பார்வையில் சேவகனாய் விண்ணுயர நின்றீர்கள்… வாழ்க பல்லாண்டு!

**திரு. பா.பாலகணேசன்**

**வாழ்க பல்லாண்டு**

"உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்" எனும் பாரதியின் பாவரிகளுக்குச் சொந்தக்காரன். அன்பாய், பண்பாய், பணிவாய்ப் பாங்குடன் பழகும் பண்பாளன். இளையோர் முதல் முதியோர் வரை இங்கிதமாகப் பேசி இன்னல்களைக் களைபவர். உற்றவிடத்து உதவும் உள்ளம். நற் பண்புகள் சிறந்த ஞானமணி! ஆகவை அறுபது அனைவருக்கும் சொந்தமே. அண்ணலே அடுத்தடுத்து நாம் எல்லாம் அணி வகுத்து நின்றோம். வாஸ்தவம் உணர்ந்து வாஞ்சையுடன் வாழ்த்துகின்றேன். வாழ்க பல்லாண்டு.

**திருமதி ஜெ.உதயகுமார்**

**வாழ்க பல்லாண்டு**

காலம் எல்லாம் சீரும் சிறப்புடனும், உடல் உள ஆரோக்கியத்துடனும் வாழ உங்களுக்கும் குடும்ப உறுப்பினர்கள் அனைவருக்கும் இறைவனி ஆசி நிறைவாகக் கிடைப்பதாக…!

**திரு.அ.ஜேம்ஸ்**

**வாழ்க பல்லாண்டு**

என்றும் அன்புடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்க்கையில் எல்லா வகையான செல்வச் செழிப்புக் களையும் பெற்று இன்பம் பொங்க மகிழ்ச்சி பொங்க சீருடனும் சிறப்புடனும் வாழ வேண்டுமென மனதார வாழ்த்துகின்றேன்…!

**திரு.சி.முகுந்தன்**

# எங்கள் வித்தகரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் ஐயாவின் வித்தகங்கள் சில..

## வித்தகரியின் சிந்தனையில் உதித்த மாணவர்களுக்கான சுற்றாடல் சார் செயற்பாடுகள்



யாழ் இந்து ஆரம்ப பாடசாலையில்...



யா / அச்சுவேலி சென்திரேசாவில்...



யா / கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலய மாணவர்களுடன்...



யா / சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலையில்...



காரைநகர் கோட்டத்தைச் சேர்ந்த மாணவர்களுடன்...

## அயற் பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் செயற்பாடுகள்





# எங்கள் வித்தகரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் ஐயாவின் வித்தகங்கள் சில..

## மாணவ ஆசிரியர்களின் விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் வித்தகரியின் வியத்தகு செயற்பாடுகள்










## யா / தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மாணவர்களுக்கான செய்முறைப் பயிற்சிகள்









# எங்கள் வித்தகரி உயர்திரு ஞானமணி இரத்தினசிங்கம் ஐயாவை வாழ்த்தும் நல் உள்ளங்கள் சில..

அரச சேவை நிறைவு நாளின் இறுதி நிமிடங்களில்...






சேவை நயப்பு திரு ஞா.இரட்ணசிங்கம்

விரிவுரையாளர்

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி

[illegible]

Dr.(Mrs) C.Nagendran

Lecturer

J.CoE




